## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## MCOP - 14 /2016 C/W MCOP 7/2017 C/W MCOP No.11/2017

**நாள் – 24.07.2025**

**PW – 2** ரேவதி

**க/பெ.** சிவலிங்கம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025)**

**குறுக்கு விசாரணை**

1. நான் MCOP 7/2017 மனுவில் மனுதாரர் ஆவேன். MCOP 14/2017 மனுவில் மனுதாரரான சிவலிங்கம் எனது கணவர். MCOP 14/2016 மனுவில் மனுதாரர் மைனர் சபரிவாசன் எனது மகன் ஆவார். விபத்து சமயம் இருசக்கர வாகனத்தில் நானும், எனது கணவரும், எனது மகனும் மற்றும் எனது மகள் தமிழரசியும் சென்றோம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை எனது கணவர் தான் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். 26.06.2016–ம் தேதியில் விபத்து நடந்தது என்றால் சரிதான். நாங்கள் தறிக்குடோன் வைத்து நடத்தி வருகிறோம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வாடகைக்கு எடுத்து நடத்தி வருகிறோம். எனக்கு மாதம் ரூ.10,000/– வருமானம் வருகிறது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் பின்னிட்டு தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். விபத்து சமயம் எனது வாகனத்திற்கு காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் விபத்து சமயம் நாங்கள் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. எங்களது வாகனத்தில் 4 பேர் சென்றதால் தான் எனமு கணவர் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஓட்டிச்சென்று எதிரே வந்த

வாகனத்தின் மீது மோதி வலிய விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய காயச்சான்றிதழ் ம.சா.ஆ.18 எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகன் சபரிவாசனுக்கு இடது கால் மற்றும் வயிற்றில் அடிபட்டது. அதனால் எனது மகனின் இடது கால் தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது மகனுக்கு திருப்பூர் மலர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பிறகு திருப்பூர் கேர் ஆர்த்தோ மருத்துவமனையில் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. எனது மகனின் மருத்துவ செலவிற்காக வேண்டி ரூ.31,816/—க்கு மிகைப்படுத்தி மருத்துவ பில்களை வாங்கி தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் மீது மோதியதாக சொல்லப்படும் டாடா ஏசி வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு Batch கிடையாது என்பதால் எனக்கு இழப்பீடு வழங்க காப்பீட்டு நிறுவனம் கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனுக்கள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :—** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.24 18:39:33 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**